**செய்தி வெளியீடு எண் : 1358** **நாள் : 11.07.2023**

**முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள "பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்" என்ற குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்தலில் 13 முறை போட்டியிட்டு அனைத்து முறையும் வெற்றி பெற்றவரும், 5 முறை தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராக இருந்தவருமான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அன்னாரது புகழ் நிலைத்திடும் வகையிலும் அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையிலும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையிலும் அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடிட முடிவு செய்யப்பட்டு இதற்கென பல்வேறு தலைப்புகளில் குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டது. அதில் "பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் – கலைஞர்" என்ற குழு மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இன்று (11.07.2023) தலைமைச் செயலகத்தில் இக்குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு. நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்குழுவின் இணைத்தலைவர்களாக மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துச்சாமி அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும் உறுப்பினர் செயலருமான முனைவர். சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., மற்றும் இக்குழு உறுப்பினர்களான திருமதி. ஏ. எஸ். குமரி, திரு. சுந்தர ஆவுடையப்பன், திரு. வே. மதிமாறன், திரு. வாலாசா வல்லவன், திரு. சூர்யா சேவியர், திரு. செந்தலை கவுதமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புற நடத்துவது குறித்தும் கருத்தரங்கங்கள் நடத்துவது குறித்தும் விழா மலர் வெளியிடுவது குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in